1978 மார்ச் 21]

தண்டராம்பட்டு ஒன்றிய விவசாயப் பொறியாளர் கூட்டுறவு சேவை சங்கம்.

*652 வினு திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

தண்டராம்பட்டு ஒன்றியத்தில் உள்ள விவசாயப் பொறியியல் கூட்டுறவு சேவை சங்கத்தின் நிர்வாக இயக்குநர் பதவி நீண்ட நாட்களாக காலியாக உள்ளதால் நடைபெறவேண்டிய பணிகள் செவ்வனே நடைபெருமல் உள்ளதால், விவசாயிகளின் நலன் கருதி உடனடியாக நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 27—9—1977 முதல் 10-1-1978 வரையில் தண்டராம்பட்டு விவசாயப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் திரு. அப்பாதுரை என்னும் நிர்வாக இயக்குநரின்கீழ் இயங்கி வந்திருக்கின்றது. திரு அப்பாதுரையை இராமநாதபுரம் மாவட்டம் சாக்கோட்டை விவசாயப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையத்திற்கு மாற்றியபின், 11—1—1978-லிருந்து, செங்கம் மையத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சி. கணேசன் என்பவரின் கூடுதல் பொறுப்பில் இயங்கி வருகின்றது தற்போது கூடுதல் பொறுப்பில் பணிபுரியும் நிர்வாக இயக்குநர், விவசாயிகளின் தேவையைக் கவனித்துக்கொண்டு வருகிருர். இம்மையத்திற்கு தனியே ஓர் நிர்வாக இயக்குநரை விரைவில் நியமனம் செய்ய தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையக நிர்வாக இயக்குநர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிருர்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, செங்கம் நிர்வாக இயக்குநர் அவர்களின் பொறுப்பிலே இந்தப் பணி இயங்குவதாக அமைச்சரவர்கள் கூறினுர்கள். இங்குள்ள உதிரிப் பொருட்களை செங்கம் நிர்வாக இயக்குநர் அவர்கள் எல்லாமே எடுத்துச் சென்று விட்டார்கள். எந்தப் பணியும் நடைபெறவில்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் விவசாயப் பணி மையத்திலே பணியாற்றும் நிர்வாக இயக்குநர் தண்டராம்பட்டு பணி மையத்தின் கூடுதல் பொறுப்பைக் கவனித்து வருகிருர். அங்கே இருக்கின்ற விவசாயக் கருவிகளையும், பொருள்களையும் வேறு மையத்திற்கு எடுத்துச் செல்ல முன் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும். அப்படி ஏதாவது எடுத்துச் சென்றதாக புகார் ஏதாவது மாண்புமிகு உறுப்பினரவர்கள் தருவார்களேயானுல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விவசாயப் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்கள் இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர்கள் முன்னுலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தனி அதிகாரியின் நிர்வாகத்தில் இருப்பதால் பல இடங்களில் இருக்கும் கருவிகள் பயன்படுத்தப்படாமலும், பிரயோசனம் இல்லாமலும் இருப்பதால் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை அமைக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. கா. சு. தண்டபாணி : தலைவரவர்களே, கூட்டுறவு விவசாயப் பணி மையங்கள் இல்லாத ஒன்றியங்களில் துணை மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இதுபோன்ற நிறுவனங்களில் இதற்குமுன் நடந்த ஆட்சியில் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி தண்டராம்பட்டு ஒன்றியத்தைப் பற்றியது. வேறு தகவல்கள் அமைச்சரிடம் இருக்காது.

வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) இராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது குறித்து.

*திரு. துரை முருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்த நேரத்தில் ஒரு முக்கியமான பிரச்னையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளாக இந்த அவையிலே நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்றால் அரசாங்கம் நாங்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் எங்களை முறையாக நடத்த வேண்டும்.